செ.வெ.எண்: 13 / மார்ச் /2020 நாள்: 04.03.2020

மாவட்ட அளவிலான வளைகோல்பந்து லீக் போட்டிகள் வருகின்ற 07.03.2020 அன்று அண்ணா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சு.சிவராசு, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

-------------

மாவட்ட அளவிலான வளைகோல்பந்து லீக் போட்டிகள் 07.03.2020 அன்று காலை 9.00 மணி முதல் திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளது.

விதி முறைகள்:

போட்டியில் கலந்துகெள்ளும் கிளப்/ தனியார்/ பொது நிறுவன அணி வீரர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஒவ்வொரு அணியின் குருப் போட்டோ கொண்டு வருதல் வேண்டும். முதல் போட்டியின் போது தங்கள் அணியின் 16 வீரர்கள் பெயர்களை கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும். போட்டியில் சீருடைநெம்பருடன்கலந்துக் கொள்ள வேண்டும். நுழைவு விண்ணபத்தில் வீரர்கள் படிக்கும் பள்ளி/கல்லூரி / கிளப் முகவரி மற்றும் வீட்டு முகவரியுடன் அனுப்பவேண்டும். போட்டியில் கலந்துக் கொள்ளும் அணியினை நிறுத்தவோ, நீக்கவோ நிர்வாக கமிட்டியின் அதிகாரத்திற்கு உட்பட்டது. வெற்றி பெறும் அணி மண்டல அளவிலான வளைகோல்பந்து போட்டியில் கலந்துக் கொள்ள தகுதி பெறுகிறார்கள். போட்டிகள் இந்திய வளைகோல்பந்து கழகத்தின் (IHF)விதிமுறைகளை பின்பற்றி நடத்தப்படும். நுழைவு விண்ணப்பத்தினை 06.03.2020 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகம் அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி-23 என்ற முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி-620023 (போன் 0431 - 2420685) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**செய்தி வெளியீடு:**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.